பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 06 2017 பிற்பகல்12 40 வியாழக்கிழமை ஆகாசவாணி

தலைப்புச்செய்திகள்

1 குடியரசுத் தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் திரு ராம்நாத் கோவிந்தை ஆதரிப்பதாக அஇஅதிமுகவின் இரு அணிகளும் அறிவித்துள்ளன.

2 மேற்கு வங்க ஆளுநர் திரு கேசரிநாத் திரிபாதி, பீகார் மாநில தற்காலிக ஆளுநராக பதவியேற்றுக் கொண்டுள்ளார்.

3 அரசு கருவூலத்திலிருந்து சட்டவிரோதமாக பணம் எடுத்ததாக தொடரப்பட்ட வழக்கில் ராஷ்டிரிய ஜனதாதள் தலைவர் திரு லாலுபிரசாத் ராஞ்சியில் உள்ள சிபிஐ நீதிமன்றத்தில் இன்று ஆஜரானார்.

4 ஜம்மு-கஷ்மீர் புல்வாமா மாவட்டத்தில் ராணுவத்துடன் நடந்த மோதலில் மூன்று பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

5 மத்தியப் பிரதேசத்தில் விவசாயிகள் போராட்டம் தீவிரமடையாமல் தடுக்கத் தவறியதாக மூன்று அதிகாரிகள் பணியிடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

6 ஆஸ்திரேலிய ஓபன் சூப்பர் சீரிஸ் பேட்மிண்டன் தொடரில் கிடாம்பி ஸ்ரீகாந்தும், சாய் பிரனீத்தும் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்கள்.

- இனி விரிவான செய்திகள் -

<<<><><><>>>

குடியரசுத் தலைவர் தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் திரு ராம்நாத் கோவிந்தை ஆதரிப்பது என்று தமிழக முதலமைச்சர் திரு எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அஇஅதிமுக அம்மா அணி முடிவு செய்துள்ளது.

இதேபோல் திரு ஓ பன்னீர்செல்வம் தலைமையிலான அஇஅதிமுக புரட்சித் தலைவி அம்மா அணியும் திரு கோவிந்தை ஆதரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது,

இந்த அறிவிப்பை வெளியிட்ட திரு ஓ பன்னீர்செல்வம், பிஜேபி தலைவர் திரு அமித்ஷா கேட்டுக் கொண்டதன்படி இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.

இந்த அணியில் பத்து, மக்களவை உறுப்பினர்களும் இரண்டு மாநிலங்களவை உறுப்பினர்களும், 11 சட்டமன்ற உறுப்பினர்களும் உள்ளார்கள்.

<<<><><><>>>

குடியரசுத் தலைவர் தேர்தலில் தங்களது வேட்பாளரை இறுதி செய்வது குறித்து விவாதிக்க புதுதில்லியில் இன்று எதிர்க்கட்சிகள் கூட்டம் நடைபெறுகிறது.

காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி இந்த கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக திரு ராம்நாத் கோவிந்தை பிஜேபி அறிவித்திருப்பது ஒருதலைப்பட்சமான முடிவு என்று காங்கிரஸ் கூறியுள்ளது.

அவரது பெயர் காங்கிரஸ் கட்சியுடன் விவாதிக்கப்படவில்லை என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு குலாம்நபி ஆசாத் குற்றம்சாட்டியுள்ளார்.

மக்களவை முன்னாள் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான திருமதி மீரா குமாரின் பெயர் குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக அறிவிக்கப்படக்கூடுமென செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமதி மீரா குமார் நேற்று புதுதில்லியில் திருமதி சோனியா காந்தியை அவரது இல்லத்தில் சந்தித்தார்.

எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் இது குறித்த இறுதி முடிவு அறிவிக்கப்படும்.

இதனிடையே, திருமதி சோனியா காந்தி அழைத்துள்ள எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் ஐக்கிய ஜனதா தள் கலந்து கொள்ளும் என்று அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் திரு கே சி தியாகி தெரிவித்துள்ளார்.

இந்த கட்சி தேசிய ஜனநாய கூட்டணியின் வேட்பாளரை ஆதரிப்பது என ஏற்கனவே முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எனினும், எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் வேட்பாளரைதான் ஆதரிக்கப்போவதாக ஆர்ஜேடி தலைவர் திரு லாலுபிரசாத் தெரிவித்துள்ளார்.

<<<><><><>>>

பீகார் மாநிலத்தின் தற்காலிக ஆளுநராக மேற்கு வங்க ஆளுநர் திரு கேசரிநாத் திரிபாதி இன்று பதவியேற்றுக் கொண்டார்.

பாட்னா உயர்நீதிமன்ற நீதிபதி ராஜேந்திர மேனன் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு நிதிஷ் குமார், துணை முதலமைச்சர் தாஜேஸ்வி பிரசாத் யாதவ், எதிர்க்கட்சித் தலைவர் திரு பிரேம் குமார் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

குடியரசுத் தலைவர் பதவிக்கு தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட திரு ராம்நாத் கோவிந்த் பீகார் மாநில ஆளுநர் பொறுப்பை ராஜினாமா செய்துவிட்டதால் ஏற்பட்ட காலி இடத்திற்கு அவர் நியமிக்கப்பட்டார்.

<<<><><><>>>

அஸ்ஸாம் தலைநகர் குவஹாத்தியில் தொடர்ந்து பெய்யும் அடைமழை காரணமாகஇயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

வாகனப்போக்குவரத்து தடைபட்டுள்ளதால், அலுவலகம் செல்வோரும், மாணவர்களும் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளார்கள்.

மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்தார். அவசர உதவி சேவைகளை மாவட்ட நிர்வாகம் முடுக்கிவிட்டுள்ளது.

கடந்த பத்து நாட்களுக்கு முன் பெய்த பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தை அடுத்து, இரண்டாவது முறையாக அடைமழை பெய்ததால், மக்கள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

<<<><><><>>>

அரசு கருவூலத்திலிருந்து சட்டவிரோதமாக பணம் எடுத்ததாக தொடரப்பட்ட மூன்று வழக்குகளில் ராஷ்டிரிய ஜனதாதள் தலைவர் திரு லாலுபிரசாத் ராஞ்சியில் உள்ள சிபிஐ நீதிமன்றத்தில் இன்று ஆஜரானார்.

கால்நடைத் தீவன மோசடி வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட பீகார் முன்னாள் முதலமைச்சர் திரு ஜெகன்னாத் மிஸ்ராவும் அவருடன் ஆஜரானார்.

லாலு பிரசாத்துக்கு ஆதரவாக 36 சாட்சிகளின் பெயர்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களிடம் வரும் 29 ஆம் தேதி வாக்குமூலம் பெறப்படும் என்றும் லாலு பிரசாத்தின் வழக்கறிஞர் தெரிவித்தார்.

<<<><><><>>>

அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து ஜிஎஸ்டி வரி நடைமுறைக்கு வருவதால், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு சாதன வர்த்தகம் செய்வோர் வரி செலுத்துவதை எளிமைப்படுத்தும் வகையில் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தனி இணையதளம் தொடங்கியிருக்கிறது.

அமைச்சகத்தின் வலைதளத்தல் இதற்கான இணைப்பை பெற முடியும்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு வணிகத்தில் ஈடுபட்டுள்ள தனிநபர்களும், நிறுவனங்களும் இந்த இணையத்தில் தொடர்பு கொண்டு தேவையான தகவல்களைப் பெற முடியும்.

<<<><><><>>>

மத்தியப் பிரதேசத்தில் விவசாயிகள் போராட்டத்தின் போது மாண்ட்சௌர் பகுதியின் ஆட்சியாளராக இருந்த திரு சுவதந்திர குமார் சிங், காவல்துறை கண்காணிப்பாளர் திரு ஓ பி திரிபாதி, அந்நகர காவல்துறை கண்காணிப்பாளர் திரு கிருஷ்ணசாய் தோடே ஆகியோர் அம்மாநில அரசால் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் விவசாயிகள் போராட்டத்தின் போது கலவரத்தைக் கட்டுப்படுத்த தவறிவிட்டதாக அதிகாரபூர்வ செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 6 ஆம் தேதி நடைபெற்ற இச்சம்பவத்தில் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர சில இடங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மாண்ட்சௌர் வன்முறைச் சம்பவம் தொடர்பாக நீதி விசாரணைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

<<<><><><>>>

ஜம்மு காஷ்மீர் புல்வாமா மாவட்டத்தில் பயங்கரவாதிகள் உடனான மோதலில் பாதுகாப்பு படையினர் 3 தீவிரவாதிகளை சுட்டுக்கொன்றனர்.

காக்காபோரா பகுதியில் 3 பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த உளவுத் தகவல் அடிப்படையில் பாதுகாப்பு படையினர் தேடுதல் நடவடிக்கையில் நேற்றிரவு ஈடுபட்டனர். அப்போது ஏற்பட்ட சண்டையில், இந்த பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ராணுவ அதிகாரி ஒருவருக்கு லேசான காயம் ஏற்பட்டது.

கொல்லப்பட்ட பயங்கரவாதிகள் யார், எந்த இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்பது குறித்து புலனாய்வு செய்யப்படுவதாக மாநில காவல்துறை தலைமை இயக்குனர் **Dr.S.P.Vaid** தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தை அடுத்து, புல்வாமா மாவட்டத்தில இணையதள சேவை துண்டிக்கப்பட்டுள்ளது.

<<<><><><>>>

ஜம்மு-கஷ்மீர் புல்வாமா மாவட்டத்தில் லஷ்கர்-ஈ-தொய்பா தீவிரவாதிகள் மூன்று பேர் கொல்லப்பட்டதை அடுத்து, கஷ்மீர் பள்ளத்தாக்கில் அனைத்து ரயில்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

மத்திய கஷ்மீர் முதல் பாரமுல்லா வரை ஸ்ரீநகர் - பட்காம் மார்க்கத்தில் ரயில் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேபோல், பட்காம் - ஸ்ரீநகர் - புல்வாமா – அனந்த்நாக் - காசிகுந்த் ஆகிய மார்க்கத்திலும் ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

<<<><><><>>>

பி எஸ் எல் வி சி - 38 ராக்கெட்டை விண்ணில் செலுத்துவதற்கான 28 மணிநேர கவுண்ட் டவுன் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சத்தீஷ் தவான் ஏவுதளத்தில் இன்றுகாலை தொடங்கியது.

இந்த ராக்கெட் நாளை காலை மணி 9 - 29-க்கு கார்ட்டோ சாட் இரண்டு இ மற்றும் 30 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தவுள்ளது.

இந்த 30 செயற்கைக் கோள்களில் 29 செயற்கைக்கோள்கள் 14 நாடுகளைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு சொந்தமானது.

நமது நாட்டிலிருந்து அனுப்பப்படும் நேனோ செயற்கைக் கோள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்வி நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்டது.

இந்த கார்டோசாட்-இரண்டு வரிசையில் உள்ளவை தொலையுணர்வு செயற்கைக்கோளாகும்.

இதன் ஆயுட்காலம் ஐந்தாண்டுகள். ஏற்கனவே இதுபோன்று ஐந்து செயற்கைக்கோள்கள் புகைப்படக் கருவிகளுடன் அனுப்பப்பட்டுள்ளன.

அவற்றிலிருந்து பெறப்படும் தகவல்கள், நகரங்கள் மற்றும் கிராமப்புற திட்டமிடுதல், கடலோர நிலங்கள் ஒழுங்கமைப்பு, சாலைகள் கண்காணிப்பு முதலியவற்றுக்கு பயன்படும்.

<<<><><><>>>

அறிவியல் தொழில்நுட்பத்தில் மேலும் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான துறைகளை இந்தியாவும், ரஷ்யாவும் அடையாளம் கண்டுள்ளன.

விண்வெளி, கடல்சார் தொழில்நுட்பம், ஆழ்கடல் பொறியியல் தொடர்பான தகவல் தொழில்நுட்பம் ஆகியவை இந்தத் துறையில் அடங்கும்.

சைபீரியாவில் நேற்று நடந்த முதலாவது இந்தியா-ரஷ்யா அறிவியல் தொழில்நுட்ப ஒத்துழைப்பு கூட்டத்தில் இவை தேர்வு செய்யப்பட்டன.

கூட்டத்திற்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு அருண்ஜேட்லியும், ரஷ்ய துணை பிரதமர் திரு டிமித்ரி ரொகோசின்னும் தலைமை வகித்தனர்.

<<<><><><>>>

ஈராக் நாட்டின் மோசூல் நகரில் பாரம்பரிய வரலாற்றுச் சிறப்பு மிக்க அல்நூரி என்ற மசூதியையும், அதிலிருந்த புகழ் பெற்ற சாய்வு கோபுரத்தையும் ஐஎஸ் தீவிரவாதிகள் குண்டுவைத்து தகர்த்துவிட்டார்கள்.

இந்த கோபுரம் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

தீவிரவாதிகள் இந்த நாசச்செயலில் ஈடுபட்ட போது மசூதியிலிருந்து 50 மீட்டர் தொலைவில்தான் ஈராக் ராணுவ வீரர்கள் இருந்தார்கள் என்று ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த கோபுரத்தை அமெரிக்க விமானம் தகர்த்ததாக ஐஎஸ் தீவிரவாதக் குழு கூறியிருக்கிறது. ஆனால், ஐஎஸ் தீவிரவாதிகளே இந்த நாசச் செயலுக்கு காரணம் என்று அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

<<<><><><>>>

வளைகுடா நாடுகளால் ஒதுக்கிவைக்கப்பட்ட கத்தாருடன் பேசுவதற்கு சவுதி அரேபியாவும், இதர வளைகுடா நாடுகளும் கோரிக்கை பட்டியல் ஒன்றை தயாரித்துள்ளன.

ஏற்கனவே தூதரக அளவில் இந்த நாடுகளுக்கு இடையே பேச்சுக்கள் நடந்துவரும் நிலையில், இந்த கோரிக்கைகள் நியாயமானவை என்றும், இதன்மூலம் தீர்வு கிடைக்கும் என்று நம்புவதாகவும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு ரெக்ஸ் டில்லர்சன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கத்தாருக்கும் வளைகுடா நாடுகளுக்கும் இடையே குவைத் மேற்கொண்டு வரும் சமரச முயற்சியில் தீர்வு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

இந்தப் பிரச்சினையில் தீர்வுகாணும் பொறுப்பை அமெரிக்க அதிபர் திரு டொனால்டு டிரம்ப் திரு டில்லர்சனிடம் ஒப்படைத்துள்ளார்.

<<<><><><>>>

கொரிய பிராந்தியத்தில் பதற்ற நிலை அதிகரிக்காமல் தடுக்கும் பொறுப்பு சீனாவுக்கு உள்ளது என்று அமெரிக்கா வலியுறுத்தியிருக்கிறது.

ஐநா தடைகளை மீறி வடகொரியா நடந்து கொள்ளாமல் தடுக்க வேண்டும் என்று சீன அதிகாரிகளிடம் அமெரிக்க தூதரக அதிகாரிகளும், ராணுவ அதிகாரிகளும் வலியுறுத்தினார்கள்.

அமெரிக்காவை தாக்கும் சக்தி வாய்ந்த அணு ஆயுத ஏவுகணைகளை வடகொரியா தயாரிப்பதாக கூறியிருப்பதை அடுத்து, வடகொரிய தலைவர் கிம் ஜாங்-ஐ பொருளாதார ரீதியில் கட்டுப்படுத்த வேண்டும் என்று சீனாவை அமெரிக்க அதிபர் திரு டொனால் டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

<<<><><><>>>

ஆஸ்திரேலிய ஓபன் சூப்பர் சீரிஸ் பேட்மிண்டன் தொடரில் கிடாம்பி ஸ்ரீகாந்தும், சாய் பிரனீத்தும் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்கள்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் போட்டியில் உலக தரவரிசையில் முதலிடம் பெற்றுள்ள கொரியா வீரர் சான் வான் ஹோவை, ஸ்ரீகாந்த் தோற்கடித்தார்.

சீனாவின் குவாங் யூ சியாங்கை, சாய் பிரனீத் வென்று காலிறுதிக்குள் நுழைந்தார்.

எனினும், மகளிர் இரட்டையர் போட்டியில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா, மற்றும் சிக்கிரெட்டி இணை ஜப்பானின் தனாக்கா – யோனிமோட்டோ இணையிடம் தோல்வியடைந்தது.

<<<><><><>>>